வடமராட்சிக்கான
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50
பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 72

06 திங்கட்கிழமை பெப்ரவரி 2023

தை 23 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## ஒற்றையாட்சியா? சமஷ்டியா?

# சொற்போரை கைவிடுங்கள்; அதிகாரங்களைப் பகிர்வேன்!

### என்கிறார் ஜனாதிபதி ரணில்

யாழ்ப்பாணம், பெப்ரவரி. 7

வடக்கிலுள்ளவர்கள் சமஷ்டியை விரும்புகின்றபோதும் தெற்கிலுள்ளவர்கள் அதற்கு எதிராக போர்க்கொடி தூக்கி ஒற்றையாட்சி வேண்டும் என்கின்றார்கள். தெற்கிலுள்ளவர்கள் ஒற்றையாட்சியை விரும்பும் போது வடக்கிலுள்ளவர்கள் அதனை எதிர்க்கின்றார்கள். எனவே சொல்லாடல்களை தவிர்த்துவிடுங்கள். ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரங்கள் பகிரப்படும். அதில் உறுதியாக இருக்கின்றேன்- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

11



## அரசாங்க அச்சகம் ஊடாக தேர்தலுக்கு முட்டுக்கட்டை

*ரூ. 770 மில். விடுவிக்க திறைசேரியிடம் தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கை*

கொழும்பு, பெப். 6

தபால்மூல வாக்களிப்புக்குரிய வாக்குச் சீட்டுக்களை ஆக்கக்கூடியது 5 நாள்களுக்குள் அச்சிட

11

## உள்ளூராட்சித் தேர்தலுக்காக பணத்தை விடுவிப்பது கடினம்

கொழும்பு, பெப். 6

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான பணத்தை வழங்குவது மிகவும் சிரமமான விடயமென அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். திறைசேரியிடம் போதிய நிதியின்மையே இதற்கான காரண மென அவர் கூறியுள்ளார்.

11

## பொலிஸ் திணைக்களத்தின் செலவு மதிப்பீட்டைப் பார்த்து ஏங்கிய தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, பெப். 6

உள்ளூராட்சித் தேர்தலுக்கு சேவைகளை வழங்குவதற்கு 2.8 பில்லியன் ரூபா தேவை என பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. இது கடந்த 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6 மடங்கு அதிகம் எனவும், தேர்தல்கள் திணைக்களத்

11



## எரிவாயு விலை அதிகரிப்பு

கொழும்பு, பெப். 6

சமையல் எரிவாயுவின் விலை நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது. 12.5 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டர் 334

11

## முல்லைத்தீவில் மையங்கொண்ட எழுச்சிப் பேரணி!

### 2 ஆம் நாள் நிறைவு

முல்லைத்தீவு, பெப். 6

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி முல்லைத்தீவு நகரத்தில் நேற்று நிறைவடைந்தது. யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்தப் பேரணி நேற்றுமுன்தினம் மாலை கிளிநொச்சி நகரை வந்தடைந்து. அங்கிருந்து நேற்றுக் காலை

11

## சிற்றுண்டிகளின் விலை உயரும்?

கொழும்பு, பெப். 6

சிற்றுண்டிகளின் விலை திருத்தம் தொடர்பான இறுதி தீர்மானம் இன்று எடுக்கப்படவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

11

## ஆர்னோல்டின் மேயர் பதவியை சவாலுக்குட்படுத்திய வழக்கு இன்று

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ்ப்பாணம் மாநகரசபையின் மேயராக கடந்த மாதம் இ.ஆர்னோல்ட் தெரிவு செய்யப்பட்டமைக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மேயர் இ.ஆர்னோல்ட் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணியும், தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் முன்னிலை

11

## இறுதி நேரத்தில் பேரணிக்கு பொலிஸார் முட்டுக்கட்டை!

அம்பாறை, பெப். 6

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய மக்கள் பேரெழுச்சிப் பேரணியில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளின் சங்கத் தலைவி கலந்து கொள்வதைத் தடுக்கும் வகையில் பொலிஸார் கட்ட

11

## ஹைஏஸ் - மோ.சைக்கிள் விபத்தில் இளைஞன் சாவு

### இன்னொருவர் ஆபத்தான கட்டத்தில்

யாழ்ப்பாணம், பெப். 6

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தாவடிப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - ஹைஏஸ் வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில்

11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மக்களுக்கும் சுதந்திரதினம் கரிநாள்

## கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப். 6

சிங்கள மக்களுக்கும் இந்தச் சுதந்திரதினம் கரிநாளாகவே அமைந்துள்ளது. சிங்கள மக்களும் இந்தச் சுதந்திரதினத்தை கரிநாளாகக் கடைப்பிடித்து, அரசாங்கத்துக்கு எதிராகப் போராடுகின்ற நிலை இன்று ஏற்பட்டிருக்கின்றது – இவ்வாறு சுட்டிக்காட்டினார் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திர குமார் பொன்னம்பலம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒற்றையாட்சியின் 13ஆவது திருத்தத்தை ஒரு தீர்வாக ஏற்கவோ தீர்வுடைய ஆரம்ப புள்ளியாகக் கருதுவதற்கோ நாம் தயாரில்லை. இதை நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதுடன், எமது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றோம். சிறிலங்காவின் சுதந்திரதினத்தை சிங்கள தேசத்தில் உள்ள மக்களே கரிநாளாகக் கடைப்பிடிக்கும் நிலைமை இன்று ஏற்பட்டிருக்கின்றது. சுதந்திரதினத்துக்கு எதிராக தெற்கிலும் பரவலாகப் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றுள்ளன.

ஒரு தேர்தலில் போட்டியிட்டு வெல்ல முடியாத நிலையில், மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார். இந்தச் சுதந்திர தினத்தைக் கொண்டாடாமல் விட்டால் உலகம் சிரிக்கும் என்பது அவருடைய கருத்தாக இருந்தது. ஆனால், இன்று சொந்த நாட்டின் மக்களே அவருடைய கொண்டாட்டங்களைப் பார்த்துச் சிரிக்கின்றனர் - என்றார். (ம-27)

# குருந்தூர்மலை விவகாரம்; நிலங்களை விடுவிப்பதில் தொடர்ந்து இழுபறிநிலை!

## ஜனாதிபதியின் உத்தரவும் புறந்தள்ளப்படுகின்றதா?

முல்லைத்தீவு, பெப். 6

குருந்தூர் மலையில் அமைக்கப்பட்டுள்ள விகாரைக்காக ஆறு ஏக்கர் நிலப்பரப்பை மட்டும் வைத்துக் கொண்டு ஏனையவற்றை விடுவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருந்த நிலையில், அவரின் உத்தரவுக்கமைய நிலத்தை விடுவிப்பதில் சிக்கல்கள் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வவுனியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குருந்தூர் மலையை அண்மித்த காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்தார். இதையடுத்து, ஆறு ஏக்கர்கள் தவிர ஏனையவற்றை உரிய தரப்புகளிடத்தில் கையளிக்குமாறு ஜனாதிபதி ரணில் பணிப்புரை விடுத்திருந்தார்.

அதேநேரம் தமிழ்த் தரப்புக்களுடனான சந்திப்பின் போதும், ஜனாதிபதி குறித்த பணிப்புரையை மீண்டும் அதிகாரிகளுக்கு வலியுறுத்தியிருந்தார். எனினும், இதுவரையில் அந்தப் பணிப்புரை நடைமுறைச் சாத்தியமாகவில்லை.

குறிப்பாக, பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளில் பொதுமக்களின் விருப்புடன் ஐந்து ஏக்கர்களை வைத்துக்கொள்வதற்கு முயற்சிக்கப்படுகிறது. அதேநேரம் வனத்துறைக்குச் சொந்தமான 78 ஏக்கர்களையும் தொடர்ந்து தம்வசம் வைத்துக்கொள்வதற்கு தொல்பொருளியல் திணைக்களம் முயற்சிப்பதாகவும் தெரியவருகிறது. (ம)



# முஷாரப் காலமானார்

பாகிஸ்தானின் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் (வயது - 79) உடல்நலக் குறைவால் டுபாயில் நேற்றுக் காலமானார்.

நீண்ட காலமாக உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில்சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்தார். முஷாரப் 1943ஆம் ஆண்டு டில்லியில் பிறந்தார். தேசப் பிரிவினையின்போது முஷாரப் குடும்பம் பாகிஸ்தானில் உள்ள கராச்சிக்கு இடம் பெயர்ந்தது. 1964 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் இராணுவத்தில் சேர்ந்த முஷாரப் படிப்படியாக உயர்ந்து தலைமைத் தளபதியானார். நவாஸ் ஷெரீப் ஆட்சியைக் கவிழ்த்து 1999ஆம் ஆண்டில் அதிகாரத்தைக் கைப்பற்றினார். இராணுவ ஆட்சியைப் பிரகடனம் செய்த முஷாரப், பாகிஸ்தான் நாடாளுமன்றத்தைக் கலைத்து அரசியல் சட்டத்தையும் முடக்கினார். 2001 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் அதிபராக பதவியேற்ற முஷாரப், காஷ்மீர் பிரச்சினைக்காக இந்தியாவுடன் பேச்சு நடத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

# பெரமுனவை ஜே.வி.பி. வீழ்த்தினால் கோவணத்துடன் ஓடுவதற்குத் தயார்

## சனத் நிஷாந்த எம்.பி. தெரிவிப்பு

உள்ளூராட்சித் தேர்தலில் பெரமுனவைவிட, ஜே.வி.பி. ஒரு வாக்கையேனும் அதிகமாக எடுத்தால் கோவணத்துடன் ஓடுவதற்கு நான் தயார் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

அரசியல்வாதிகளை மடக்கும் வகையில் நேர்காணல் செய்யும் ஊடகவியலாளர் ஒருவருக்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அதிக வாக்குகளை பெறும் என நேர்கண்டவர் குறிப்பிட்டார், இதனை சனத் நிஷாந்த மறுத்தார். அந்தவேளையில் சனத் நிஷாந்தவுக்கு சவாலொன்று விடுக்கப்பட்டது. அதாவது பெரமுனவை விடவும் ஜே.வி.பி. ஒரு வாக்கையாவது அதிகம் பெற்றால் கோவணத்துடன் ஓடவேண்டும் என நேர்கண்டவர் குறிப்பிட்டார், அதனை சனத் நிஷாந்த ஏற்றார். சிலவேளை ஜே.வி.பி. குறைந்த வாக்குகளைப் பெற்றால் நீங்கள் ஓடவேண்டும் என நேர்கண்டவருக்கு சனத் நிஷாந்த சவால் விடுத்தார். (ம-44)

# வயோதிபர் எண்ணிக்கை 2030 இல் உயரும்

## முதியோர் தேசியசபை தரவு

இலங்கையில் 2030ஆம் ஆண்டளவில் வயோதிபர்களின் சனத்தொகை 21 வீதமாக அதிகரிக்கும் என்று முதியோர்களுக்கான தேசியசபை தெரிவித்துள்ளது.

முதியோர்களுக்கான தேசிய சபையின் 2020ஆம் ஆண்டு அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வயோதிபர் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் 14.6 வீதமான அளவில் உள்ளது. வருடந்தோறும் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குகின்றது என்று மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

# பயங்கரவாதத் தடைச்சட்டம் கூடியவிரைவில் நீக்கப்படும்!

## நீதிஅமைச்சர் உறுதி

கொழும்பு, பெப். 6

நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் விரைவில் நீக்கப்பட்டு, பதிலாக தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பற்றீஷியா ஸ்கொட்லன்டிடம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அழைப்பையேற்று 75ஆவது சுதந்திரதின நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பற்றீஷியா ஸ்கொட்லண்டுக்கும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொழும்பில் அமைந்துள்ள ஹில்டன் விடுதியில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது கருத்துவெளியிட்ட நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்கும் நோக்கில் கடந்த 6 மாத காலத்தில் நீதியமைச்சால் புதிதாக 24 சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன - என்று தெரிவித்தார். அதற்குப் பதிலளித்த பற்றீஷியா ஸ்கொட்லண்ட், பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடு என்ற ரீதியில் இலங்கை வழங்கிவரும் ஒத்துழைப்பை பெரிதும் பாராட்டுகின்றேன். இலங்கைக்குள் நீதிக்கான அணுகலை வலுப்படுத்துவதற்கு அவசியமான அனைத்துவித ஒத்துழைப்புக்களையும் வழங்கத் தயாராகவிருக்கின்றேன் என்று தெரிவித்தார். (ம)

# ஆர்ப்பாட்டத்தில் தாக்குதல் விசாரணைகள் அதிதீவிரம்

## பொலிஸ் அடாவடிக்கு எதிரான முதலாவது அறிக்கை இன்று

கொழும்பு, பெப். 6

மருதானையில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப் பிரயோகம் குறித்து விசேட விசாரணைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

முதற்கட்ட விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. ஆணைக்குழுவை சேர்ந்தவர்கள் சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு நேற்றுச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இதுதொடர்பான முதலாவது அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# கோடிகளில் கொண்டாட்டம்

'குடிக்கிறது கூழ்; கொப்பளிக்கிறது பன்னீர்' என்றொரு முதுமொழி நம்மிடையேயுண்டு. ஆனால், இப்போது கூழுக்கே வழியில்லாமல் இலங்கை அல்லாடிக்கொண்டிருக்கையில், சுமார் 200 மில்லியன் ரூபா செலவில் சுதந்திரதினத்தைக் கொண்டாடி, காசைக் கரியாக்கி இருக்கிறது ரணில் அரசாங்கம். தேர்தலை நடத்தவே கையில் காசில்லை என்று பஞ்சப்பாட்டு பாடுகின்ற இந்த அரசாங்கம், இவ்வளவு பெருந்தொகைப் பணத்தை ஒரு சுதந்திரதினத்துக்குச் செலவிட்டமை மக்களிடையே பெரும் அதிருப்தியை உண்டுபண்ணியுள்ளது..


நிலக்கரி வாங்க டொலரில்லை, தேர்தலை நடத்தினால் கையிருப்பு காலியாகி நாடு கடனுக்குள் முற்றாக மூழ்க வேண்டியதுதான், இன்னும் ஆறுமாதங்களுக்கு மக்கள் துன்பப்படத்தான் வேண்டும், அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளும் கிடைக்குமா, கிடைக்காதா என்ற இழுபறி நிலை, உயர்ந்துகொண்டே செல்லும் விலைவாசி இப்படி எல்லாத் திசைகளிலும் நெருக்கடிகளை மட்டுமே ஒட்டுமொத்த இலங்கையும், நாட்டு மக்களும் எதிர்கொண்டு வருகின்றனர். அரசாங்க ஊழியர்களுக்கே சம்பளம் கொடுக்க தலையைப் பிய்க்க வேண்டியளவுக்கு திறைசேரியின் நிலைமை படுமோசம். ஒரு டொலர் கிடைத்தால் கூட அதைப் பெரிதாகக் கொண்டாடும் மனோநிலையில்தான் இலங்கை இருக்கின்றது. இந்த நிலையில்தான், 200 மில்லியன் ரூபா வரையான செலவில், சுதந்திரதினத்தை இலங்கை கொண்டாடி மகிழ்ந்திருக்கிறது.

காலிமுகத்திடல் அணிவகுப்புகளாலும், பரசூட் சாகசங்களாலும், மரியாதை நிமித்தமான துப்பாக்கி வேட்டுகளாலும் சரிந்து கிடக்கும் இலங்கையின் பொருளாதாரம் சட்டென நிமிர்துவிடுமென்றால், இப்படி காசைக் கொட்டி சுதந்திரதினத்தைக் கொண்டாடியதில் தவறிருக்கமுடியாது. ஆனால், கையில் இருக்கும் சொற்ப கையிருப்பையும் சிலநிமிட படோடபத்துக்காக வீசியெறிந்திருக்கிறது ரணில் அரசாங்கம். நாடே நடுத்தெருவுக்கு வந்து உலகெல்லாம் பிச்சை கேட்டுக் கொண்டிருக்கையில், இப்படி டாங்கிகளையும், பீரங்கிகளையும், படையினரையும், பரசூட்டுகளையும் கொண்டுவந்து காலிமுகத்திடல் கண்காட்சி வைக்கும் படி என்ன அவசியம் வந்துவிட்டது? இப்படி பெருமெடுப்பில் காசைக் கொட்டி கரியாக்காமல், ஜனாதிபதியின் கொடியேற்றலோடும், ஒரு உரையோடும் விழாவை மிகச் சிக்கனமாகக் கொண்டாடினால் குடியா மூழ்கிவிடும்? இல்லையே. மாறாக இப்படி சாதாரண சுதந்திரதினத்துக்கே இப்படி ஊதாரித்தனமாகச் செலவிடும் ஒரு பொறுப்பற்ற அரசாங்கத்தை நம்பி எந்த நாடும் கடன்கொடுக்க முன்வராதே. இவையெல்லாம் சர்வதேச அரசியலைக் கரைத்துக் குடித்தவர் என நம்பப்படும் ரணில் தலைமையிலான அரசாங்கத்துக்கு இதுகூடத் தெரியாதா?

உண்மையில் ரணில் இவற்றையெல்லாம் அறிந்துதான் செய்கிறார். அவரின் அதியுச்சக்கனவு, நிறைவேற்றதிகார நாற்காலிதான். ஏதோ குருட்டு அதிர்ஷ்டத்தில் அந்தப் பதவி கிடைத்ததால், தலைகால் புரியாத நிலையில் இருக்கிறார் ரணில். இனிமேல் அவர் தலையால் கிடங்கு கிண்டினாலும் அந்தப் பதவி கிடைக்காது. எனவே எஞ்சியுள்ள ஆட்சிகாலத்தில் நிறைவேற்று ஜனாதிபதிக்கு கிடைக்கக்கூடிய மரியாதை, புகழ், வசதி, அதிகாரம் என்பவற்றை அடி முதல் முடி வரை அனுபவித்துவிட்டுப்போகத்தான்ரணில்நினைக்கிறாரே தவிர, நாட்டு நலனையோ, மக்கள் நலனையோ அவர் கிஞ்சித்தும் ஏறெடுத்துப் பார்க்கப்போவதில்லை என்பதையே கோடிகளில் கொண்டாடப்பட்ட சுதந்திரதினம் இன்னொருமுறை உறுதி செய்கின்றது.

## நாளொரு நல்வார்த்தை

தொழில்நுட்பம் ஒரு சாதாரண கருவி. குழந்தைகளை ஊக்குவித்து, ஒன்றிணைந்து செயற்பட வைப்பதில், ஆசிரியர் மிக முக்கியமானவர். - பில்கேட்ஸ்



# '13' தொடர்பான கருத்துக்கள் மக்களை ஏமாற்றும் தந்திரம்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 6

அரசமைப்பின் '13'ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய உறுதிமொழி, மக்களை ஏமாற்றும் தந்திரம் என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார்.

எரியும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்பதில் இருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்ப ஜனாதிபதி முயற்சித்து வருகின்றார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'நாடு முழுவதும் உள்ள மக்கள் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் பொருளாதார நெருக்கடி குறித்து பேசிக் கொண்டிருந்தனர். எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே மீண்டும் 13ஆவது திருத்தம் தொடர்பான இந்த உரையாடலை ஆரம்பித்தார்.

எனவே, அவரின் இனவாதச் சூழ்ச்சிகளில் சிக்கிக்கொள்ள வேண்டாமென்று மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி தொடர்ந்து இடையூறு விளைவித்து வருகின்றார். தற்போது தேர்தல் பணிகள் கிட்டத்தட்ட முடிந்துவிட்டன. தேர்தலை நிறுத்தினால் பணவிரயமே ஏற்படும்' - என்றார். (ம-22)

# இந்திய இராஜாங்க அமைச்சருடன் '13' தொடர்பில் ரணில் கலந்துரையாடல்

கொழும்பு, பெப். 6

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வி.முரளிதரனை நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின்போது அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இரு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர். இன நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை இந்திய இராஜாங்க அமைச்சர் இதன்போது பாராட்டினார். இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்த்துக்களையும் அவர் தெரிவித்தார். (ம)

## நாளை

07.02.2023 செவ்வாய்க்கிழமை

தை 24


சுபநேரம் : 11.05 - 12.35

ராகுகாலம் : 03.35 - 05.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிளகாய்ச் செய்கையும் கடும் மழையால் அழிவு

## விவசாயிகள் கவலை



முல்லைத்தீவு, பெப். 6
வடமாகாணத்தில் கடந்த புதன் கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை கொட்டித்தீர்த்த கனமழை யால் மிளகாய்ச் செய்கையும் அழி வைச் சந்தித்துள்ளது என்று விவ சாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
இதுதொடர்பில் விவசாயிகள் தெரி வித்ததாவது:-
கடந்த புதன்கிழமை முதல் வெள் ளிக்கிழமை வரையில் கொட்டித் தீர்த்த கனமழையால் மிளகாய்ச் செய்கை கடும் அழிவைச் சந்தித் துள்ளது. தொடர்ச்சியான மழை யால் மிளகாய்ச் செடிகளின் வேர்ப் பகுதி அழுகிய நிலையில் காணப் படுகின்றது.
இதுதொடர்பாக உரிய அதிகாரி களுக்கு தகவல் வழங்கப்பட்ட போதிலும் பெரும்பாலான பகுதி களில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. சில இடங்களில் மாத்திரமே உரிய ஆலோசனைகள் வழங்கப்பட் டுள்ளன. எனவே இதுதொடர்பில் துறைசார் அதிகாரிகள் ஆலோ சனைகளை விரைந்து வழங்க வேண்டும் - என்றனர். (ம-14,113)

# இன்றைய நாள் (ராசிபலன்)





**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும். விற்பனை அதிகரிக்கும்.



**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்து விடுவீர்கள். எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.



**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாகும்.



**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.



**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் தகவல் கிடைக்கும்.



**கன்னி:** குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.



**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.



**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும்.



**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும். மகிழ்ச்சி ஏற்படும்.



**மகரம்:** எதிர்பாராத வாய்ப்புகள் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.



**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டி வரும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.



**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.

# முள்ளிவாய்க்காலில் புதையல் தோண்ட முற்பட்டோர் கைது!

முல்லைத்தீவு,பெப். 6
முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட குற்றச்சாட்டில் 8 பேர் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப் பட்டுள்ளனர்.
முல்லைத்தீவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை இடம் பெற்றது. புதையல் தோண்டப் பயன்படுத்திய கார் மற்றும் கனரக இயந்திரம் ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர். முள்ளியவளைப் பகுதியைச் சேர்ந்த இருவரும் அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 6 பேருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.
கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை சான் றுப்பொருள்களுடன் கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத் தப்பட்டதையடுத்து அவர்களை தலா 5 லட் சம் பெறுமதியான ஆட்பிணையில் விடுக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ச-19)



இலங்கை சுதந்திரமடைந்த நாளான 1948.02.04 இல் மன்னார் - மாந்தை மேற்கு பிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசித்து வரும் இருவர் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சுதந்திரதின நிகழ்வில் வைத்துக் கௌரவிக்கப்பட்டனர். மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. (ம-14,60)

# கசிப்புடன் இருவர் கைது!

கிளிநொச்சி, பெப். 6
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெத்தலியாறுப் பகுதியில் கசிப்புடன் இருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.
நெத்தலியாறுப் பகுதியில் நேற்று அதி காலை வீதி பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்க மைய, புதுக்குடியிருப்பு நோக்கி கசிப்பைக் கொண்டு சென்ற இருவர் கைது செய்யப்பட் டனர். கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 80 போத்தல் கசிப்பு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. மேலதிக விசாரணை களின் பின்னர் சந்தேகநபர்களை கிளி நொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (ம-14,113)

# காட்டு யானைகளால் பயிர்கள் அழிவு

## ஒட்டுசுட்டான் மக்கள் கவலை

முல்லைத்தீவு, பெப். 6
முல்லைத்தீவு- ஒட்டுசுட்டான் கனக ரட்ணபுரம் கிராமத்துக்குள் காட்டு யானைகள் புகுந்து பயிர்களை நாசம் செய்துள்ளன என்று கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
இதுதொடர்பில் அவர்கள் தெரிவித் ததாவது:-
127 குடும்பங்கள்வரை வதியும் இந்தக் கிராமத்தில் விவசாயமே முதன்மைத் தொழிலாக உள்ளது. இரவுவேளைகளில் கிராமத்துக்குள் நுழையும் யானைகள் வாழ்வாதா ரப் பயிர்களான தென்னை, வாழை உள்ளிட்ட அனைத்துப் பயிர்களை யும் நாசம் செய்து வருகின்றன. இதனால் நிதியிழப்பை சந்தித்து வருகின்றோம்.
இதேவேளை- ஒட்டுசுட்டான் - மாங் குளம் வீதியில் மாலைவேளையில் யானைகளின் நடமாட்டம் வீதிக ளில் அதிகரித்துள்ளதால் மக்கள் அச்சத்துடனேயே பயணிக்க நேரிடு கின்றது.
அழிவுகளை ஏற்படுத்தும் யானை களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவ டிக்கை எடுக்கும்படி கிராம அலுவ லரூடாக பிரதேச செயலாளருக்குத் தெரியப்படுத்தியபோதும் இது வரை எந்தவிதத் தீர்வும் வழங்கப் படவில்லை.
எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனத்தில் எடுத்து யானைகளைக் கட்டுப்படுத்த நடவ டிக்கைகளை எடுக்கவேண்டும்- என் றனர். (ச-13)

# சுதந்திரதினத்தில் மரக்கன்று நடுகை

யாழ்ப்பாணம், பெப். 6
நாட்டின் 75ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு தெல்லிப்பழைப் பிரதேசசெய லர் பிரிவுக்குட்பட்ட இளவாலை வடமேற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கடற்கரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மரநடுகை முன்னெடுக்கப்பட்டது.
யாழ். மாவட்டச் செயலரின் பங்குபற்றலுடன் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்த மரநடுகை முன் னெடுக்கப்பட்டது. (ம-14,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கரிநாள் பேரணிக்கு ஆதரவாக வவுனியாவிலும் மக்கள் எழுச்சி

யாழ்ப்பாணம், பெப். 6

சுதந்திரதினத்தை கரிநாளாக பிரகட னப் படுத்தி வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் பேரணியில், வவுனியாவிலிருந்தும் நேற்றுப் பெருமளவானோர் இணைந்து கொண்டனர்.

மக்கள் பிரதிநிதிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பல்கலைக்கழக சிவில் மாணவர் அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர். தமிழர்களுக்கு நீதிகோரி கோஷங்களை எழுப்பியவாறும், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியவாறும் அவர்கள் பேரணியில் கலந்துகொண்டனர். (ச-110,125)






# வடக்கிலிருந்து கிழக்குக்கு நகரும் மக்கள் பேரெழுச்சி

## இரண்டாம் நாள்










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு நிதி வழங்குவதில் சிக்கல்!

## நாடாளுமன்றத்துக்கு விரைவில் அரசாங்கம் தெரியப்படுத்தும்

கொழும்பு, பெப். 6
உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்கான நிதியை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அரசு நாடாளு மன்றத்துக்கு தெரியப்படுத்தவுள்ளது என்று கொழும்பு ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

9ஆவது நாடாளுமன்றத்தின் 4ஆவது கூட்டத்தொடரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பித்து வைக்கின்றார். இதன் போது ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை இடம்பெறும்.
அன்றையநாளில் ஜனாதிபதியோ அல்லது மறுநாள் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவோ மேற்படி தெரியப்படுத்தலை, நாடாளுமன்றத்துக்கு அறிவிப்பார்கள் என தெரிய வருகின்றது. உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்கு பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும் தற்போதைய நிதி நெருக்கடியில் அதனை வழங்கமுடியாது என்பது உட்பட அதற்கான காரணங்கள் விரிவாக விளக்கப்படவுள்ளன. அதேவேளை, தேர்தலை நடத்துவதற்கு நிதி வழங்க முடியாதுள்ளது என திறைசேரியின் செயலாளர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-44)

# மஹிந்த மீண்டும் பிரதமர்? பெரமுனவுக்குள் பிளவு!

கொழும்பு, பெப். 6
மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக்குவது தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் இருவேறு கருத்துக்கள் நிலவி வருவதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.
பிரதமர் பதவியில் இருந்து விலகுவதற்கு தினேஷ் குணவர்த்தன தயார் நிலையில் இருப்பதாகவும், எனவே, மஹிந்தவை மீண்டும் பிரதமராக்க வேண்டும் எனவும் பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தியுள்ளனர்.
எனினும், அரசுக்கு ஆதரவு வழங்கும் பங்காளிக்கட்சிகள் உட்பட மேலும் சில தரப்புகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. தினேஷ் குணவர்த்தனவை நீக்கிவிட்டு, மஹிந்தவை கொண்டுவந்தால் தேவையற்ற அரசியல் குழப்பம் உருவாகக்கூடும் எனவும் அவை சுட்டிக்காட்டியுள்ளன. இதனால் பிரதமர் விவகாரம் தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் குழப்ப நிலை உருவாகியுள்ளது. (ம-44)

# பொருளாதார வீழ்ச்சி: தந்தை காரணமல்லர்!

## நாமலின் விளக்கம் இது



கொழும்பு, பெப்.6
நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு எனது தந்தையான மஹிந்த ராஜபக்ச பொறுப்புக்கூற வேண்டிய தேவையில்லை இவ்வாறு பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கோத்தபய ராஜபக்ச அரசில் எடுக்கப்பட்ட நிறைய தீர்மானங்களில் மஹிந்த ராஜபக்ச சம்பந்தப்பட்டிருக்கவில்லை. நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு மஹிந்த பொறுப்புக்கூற வேண்டிய தேவையில்லை. எமது வீடுகளுக்குத் தீவைத்து அச்சமூட்டி எமது அரசியல் பயணத்தை நிறுத்த முடியாது. அரசியல் அதிகாரம் இருப்பது மக்களின் கைகளில். நாங்கள் அரசியலில் இருக்க வேண்டுமா, இல்லையா என்று அவர்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.
காடைத்தனத்தின் ஊடாக எம் அரசியல் பயணத்தை தடுக்கமுடியாது. எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொதுஜன பெரமுன வெற்றியடைந்தே தீரும் - என்றார். (ச-22)

# கசிப்புக் காய்ச்சியவர் கொடிகாமத்தில் கைது

சாவகச்சேரி, பெப். 6
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலாலி வடக்குப் பகுதியிலுள்ள பற்றைக் காட்டில் கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.
கசிப்பு காய்ச்சப்படுகிறது என கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த பகுதி முற்றுகையிட்டு சோதனையிடப்பட்டது. அதன்போது கசிப்புக் காய்ச்சலில் ஈடுபட்ட ஒருவர் தப்பியோடிய நிலையில் மற்றவரை பொலிஸார் கைதுசெய்தனர்.
கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்கள் மற்றும் கோடா ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர். கைதாகிய சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-9)

# கல்வியமைச்சருடன் பெட்ரிசியா சந்திப்பு



கொழும்பு, பெப். 6
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பொது நலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் பெட்ரிசியா ஸ்கொட்லான்ட் தலைமையிலான குழுவினர், கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.
நாடாளுமன்ற வளாகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்பில் கல்வி முறையை மேம்படுத்தல், செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் குறிப்பிட்ட துறைகளில் காணப்படும் சாத்தியமான வாய்ப்புக்கள் ஆகியவை குறித்து இருதரப்பினரும் விரிவாக ஆராய்ந்தனர். (ச-இ)

# சுதந்திரதினமன்று முல்லையில் 75 பேருக்கு காணிப்பத்திரங்கள்

முல்லைத்தீவு, பெப். 6
புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற 75ஆவது சுதந்திரதின விழாவில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த 75 குடும்பங்களுக்கு காணி அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.
நிகழ்வில் வீட்டுத்தோட்டம், மரநடுகை, புத்தாக்கம், சிரமதானம் ஆகிய நிகழ்வுகளில் வெற்றியீட்டியவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
அத்துடன் குரவயல் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 5 மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ம-14.19)






# தேசியத்துக்கு சிறந்த சேவை கரு ஜயசூரியவுக்கு விருது!

கொழும்பு, பெப்.6
முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய உயரிய விருதான 'ஸ்ரீலங்காபிமானி' விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். தேசத்துக்கு ஆற்றிய சிறந்த சேவையைப் பாராட்டி அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கரு ஜயசூரியவுக்கு பதக்கம் அணிவித்து விருது வழங்கிக் கௌரவித்தார். (ச-இ)

# வீதியில் வீசப்பட்ட ஆண் சிசு மீட்பு!

திருகோணமலை, பெப். 6
திருகோணமலை - கன்னியாய், சர்தாபுர வீதியில் பசளை உரையில் போடப்பட்டிருந்த நிலையில் ஆண் சிசுவொன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது. குறித்த வீதியால் பயணித்தவர்கள், பசளை உரையில் வெள்ளைத் துணியால் சுற்றப்பட்ட நிலையில் சிசுவொன்று இருப்பதை அவதானித்துள்ளனர். அதனையடுத்து அருகிலுள்ளவர்களை அழைத்து சிசுவை மீட்டுள்ளனர். அதன்பின்னர் சம்பவம் தொடர்பில் உப்புவெளி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸார் சிசுவை திருகோணமலை பொதுமருத்துவமனையில் சேர்த்தனர். சிசுவின் விவரங்களைத் திரட்டுவதற்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று உப்புவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

# மரண அறிவித்தல்



## திருமதி கார்த்திகேசு மகிழரத்தினம்

கொக்குவில் மேற்கு, சொர்ணவடலியை பிறப்பிடமாகவும் கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு மகிழரத்தினம் நேற்று (05.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-கமலம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா-செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லையா கார்த்திகேசுவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, மங்கையற்கரசி, மாசிலாமணி, மனோன்மணி மற்றும் மகாதேவா காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், புஸ்பராணி, தங்கராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுமார், தேவகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெகன்-நாகதாரணி, புருசோத்தமன்-ஜெகஜெனனி, ரகுபோசன்-ஜனனி ஆகியோரின் பேர்த்தியும், விஸ்வஜாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இல.918, கே.கே.எஸ். வீதி,**
**நாச்சிமார் கோவிலடி.**
021 222 3384 / 075 041 4129

**தகவல்**
**க.தேவகுமாரன்**
**மருமகன்**(Rex Studio)

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 - 12 - 1956



மறைவு 04 - 02 - 2023

## திருமதி ரேணுகா குபேரநாதன்

**(இளைப்பாறிய உப அதிபர் இணுவில் மத்திய கல்லூரி)**

இளவாலை முள்ளானையை பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கு, கொழும்பு, மாவிட்டபுரம் வடக்கு என்பவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரேணுகா குபேரநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (04.02.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீசுப்பிரமணியம்(முன்னாள் புகையிரத அதிபர்), கமலாம்பிகை (முன்னாள் ஆசிரியை) தம்பதியினரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற சி.செல்லத்துரை(முன்னாள் புகையிரத இயக்குனர்) மீனாட்சி தம்பதியினரின் மருமகளும், செ.குபேரநாதன்(இளைப்பாறிய உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும், கு.அர்ஷன்(லம்போதரன்-இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவன்) அவர்களின் அன்புத் தாயாரும், திருமதி பேரின்பநாயகி பாலேந்திரன்(முன்னாள் ஆசிரிய ஆலோசகர்), செ.சிவநாதன்(ஓய்வு பெற்ற புகையிரத இயக்குனர்), திருமதி மகேஸ்வரி தெய்வேந்திரகுமார்(ஜேர்மனி), செ.ரகுநாதன்(கனடா), திருமதி லோகேஸ்வரி சுபேந்திரன் (இளைப்பாறிய உப அதிபர்- மகாஜனக் கல்லூரி தெல்லிப்பளை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2023) நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன்காடு மாவிட்டபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**செ.குபேரநாதன்(கணவர்)**
**(இளைப்பாறிய உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர்)**
**077 164 3162**

**அரசடி வீதி,2ம் ஒழுங்கை**
**மாவிட்டபுரம் வடக்கு.**

## காணிப்பத்திரப் பிரதிகள்: கட்டணங்களில் திருத்தம்

கொழும்பு, பெப். 6

காணி உறுதிப் பத்திரப் பிரதிகளுக்கான கட்டணங்களை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக காணிப் பதிவாளர் நாயக திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தக் கட்டண திருத்தங்கள் தொடர்பான முன்மொழிவுகள் திணைக்களத்தால் துறைசார் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் யோசனைக்கமைய அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றதும் காணி உறுதிப் பத்திரப் பிரதிகள் உள்ளிட்ட ஆவணங்களின் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என பதிவாளர் நாயக திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ச-இ)


### மணமகள் தேவை

1984 உத்திரட்டாதி, இரு கடைகள் சொந்தமாக வைத்திருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

077 5452 892

### ஓம் சக்தி திருமண சேவை

எம்மிடம் யாழ் இந்து, கொழும்பு இந்து, கத்தோலிக்க ஆண், பெண்களும், வெளிநாடு, உள்நாடு படித்த ஆண், பெண்களும் எல்லா சாதியிலும் சாதகங்கள் உள்ளன.

(பதிவுக் கட்டணம்:- 1000)

**தொடர்பு:**
**ஓம் சக்தி திருமணசேவை**
T.P: **077 803 3948**
VIBER: **074 087 9059**

**1ம் கட்டை, புலோலிமத்தி**
**பருத்தித்துறை**


# கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
செல்வி **மகேச்சுரன் பகீரதி**
அவர்களின் அன்புத் தாய்

## மகேச்சுரன் அன்னபூரணம்

அவர்கள் காலமனதையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(cs.23317) (2.7)


### மணமகன் தேவை

1982 பிறந்த ரேவதி கி.பா-7.அரச தொழில் புரியும் BA பட்டதாரி விவாகரத்து மணமகளுக்கு மணமகன் தேவை.

077 5452 892

### விற்பனைக்கு

KUBOTA லான் மாஸ்ரர் 50-XXXX 2017 விற்பனைக்கு உண்டு.

077 5452 892


# மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 11 . 1959



இறப்பு 01 . 02 . 2023

## திரு. சின்னப்பு செல்வகுலராஜா

யாழ். இருபாலையைப் பிறப்பிடமாகவும் கனடா ஸ்காபரோவை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு செல்வகுலராஜா கடந்த (01.02.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் உலகநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், பவானியின் அன்புக் கணவரும், சர்மிளன், சாருகா, சர்மிளா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாக்கியநாதன் (கனடா), ஞானதிலகராணி (ஜேர்மனி), ஜெயகுலராஜா (கனடா), ஜெயதிலகராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசந்தகௌரி, மனோரஞ்சிதராஜா, கலைவாணி, கணேசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், லலிதாம்பிகை, தனலட்சுமி, கருணாகரன், ஜெயசந்திரன், கிருபாகரன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற நல்லையா மற்றும் கனகலிங்கம், கணேசராஜா, விஜயலட்சுமி, காலஞ்சென்ற இராசவதனி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 8911 Wood bine Ave Visitation@chapel Ridge ல் இன்று (06.02.2023) திங்கட்கிழமை 5 p.m - 9.00 p.m. அன்று பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 8911 Visitation @ Chapel Ridge இல் செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறும். 07.02.2023 - 12.30 - 2.00 p.m. Iyar Service 2 p.m. - 3.30 p.m. Cremation @ Forest Lown Cremattorium 4.15 p.m. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| பவானி | (கனடா - 416 269 1875) |
| பாக்கியநாதன் | (கனடா - 416 554 4814) |
| ஜெயகுலராஜா | (கனடா - 416 827 7771) |
| கணேசலிங்கம் | (கனடா - 647 406 2827) |
| ஞானதிலகராணி | (பவா-ஜேர்மனி - 0176 4316 5722) |

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்**
47, winter Ave
Scarborough on
Mik4 L9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYK

# மரண அறிவித்தல்

மலர்வு 31 . 03 . 1941



மறைவு 03 . 02 . 2023

## தம்பிராசா மகாலிங்கம்

**(இளைப்பாறிய தபால் அதிபர்)**

வேலணை வடக்கு, பள்ளம்புலத்தைப் பிறப்பிடமாகவும், வேலணை மேற்கையும், யாழ்ப்பாணத்தையும் வசிப்பிடமாகக் கொண்ட தம்பிராசா மகாலிங்கம் கடந்த (03.02.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து (செல்லையா உபாத்தியாயர்) - மனோன்மணி, தம்பதிகளின் அன்பு மருமகனும், பொன்மயிலாம்பிகையின் பாசமிகு கணவரும், வரைமகள் (ஆசிரியர் - யா/ இந்து மகளிர் கல்லூரி), அலர்மகள் (பிரான்ஸ்), ஜனனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரன் (ஆசிரியர் - யா/ இந்து மகளிர் கல்லூரி), திலீபன் (பிரான்ஸ்), சிவதர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நயனி, தருணிகா, வரேண்யன், அபராஜிதன் (கணக்காளர் - பிரான்ஸ்), கோபிராஜிதன், மகிஷா, விதுரன், விசாலகன், விதுசா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பழனியப்பா, விசாலாட்சி, கணேசு, மகாலட்சுமி, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சோமசேகரன், சண்முகரட்ணம், பூரணானந்தம்பிள்ளை, திருநிலைநாயகி அம்மா, பாலேந்திரன் மற்றும் செல்வேந்திரன், விஜயேந்திரன், கலாமணி, காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், விஸ்வலிங்கம், இரத்தினாம்பிகை, இராமசாமி, வள்ளிநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**18, கலட்டி அம்மன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS/23298)4.6

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



தோற்றம் 21 - 11 - 1963

மறைவு 27 - 01 - 2023

## திரு. தற்பரசுந்தரம் ஜெகதீஸ்வரன்

சாவகச்சேரி, சங்கத்தானை சப்பச்சி மாவடியைப் பிறப்பிடமாகவும், DUSSELDORF ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தற்பரசுந்தரம் ஜெகதீஸ்வரன் கடந்த (27.01.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தற்பரசுந்தரம் தையல்நாயகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான் நடராஜா சீதாலெட்சுமி (ஓய்வு நிலை ஆசிரியை - இலங்கை) ஆகியோரின் அன்பு மருமகனும், காயத்திரியின் அன்புக் கணவரும், விதுஷன், கிஷோபன், திஷபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி மற்றும் ஜெகதாம்பாள், காலஞ்சென்றவர்களான நிர்மலா, மனோகரன் ஆகியோரின் அன்புச் சகோ-தரனும், சிற்சபேசன் (மலேசியா), சிவயோகன் (சுவிஸ்), விக்கினேஸ்வரர் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், அனந்தினி - செல்வகுமார், மணிவண்ணன் - லிவ் ஆகியோரின் தாய்மாமனாரும், திஜன், பரணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

Cemetery Stoffeln (friedhof Sto FFeln) Bittweg 60, 40225 DUSSELDORF GERMANY இல் அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.02.2023 புதன்கிழமை பிற்பகல் 1.00 - 3.00 மணிளவில் நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**விதுஷன் (மகன்** - + 4917 5447 3442
**ஜெகதாம்பாள்** - 075 536 5925

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 19.04.1970

மறைவு 07.01.2023

கடந்த (07.01.2023) சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவன்

## அமரர் சுப்பிரமணியம் நீதிராஜா

**(ஆசிரியர் - யா/ சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)**

(சன்னிதி முருகன் வேக்சொப் அன் சேவிஸ் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (DPMC) உரிமையாளர்களின் மூத்த சகோதரர்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (06.02.2023) திங்கட்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (07.02.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.45 மணியள வில் **"செல்வா பலஸ்" ஆம்பல் அரங்கு 3 ஆம் மாடி** இல் நடைபெறவுள்ளது. அன்றையதினம் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு: தனிப்பட்ட அழைப்பாகவும் எடுத்து வருகை தந்துகொள்ளவும்**

அமரர் சுப்பிரமணியம் நீதிராஜா அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியினைக் கேட்டு நேரடியாக வந்தும் தொலைபேசி ஊடாக மற்றும் பத்திரிகைகள், மின்னஞ்சல்கள் மூலமாகவும் அனுதாப செய்திகளை தெரிவித்து ஆறுதல் கூறிய உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் என்றென்றும் நன்றி மறவாமல் நன்றி கூற கடமைப்பட்டதுடன் அன்னார் கடமையாற்றிய சேவை நிலையங்கள் யாழ். பலநோக்கு கூட்டுறவு சங்க ஊழியர்கள், யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுக்கும், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும், யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும், வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் மற்றும் சக உத்தியோகத்தர்களுக்கும் பிரதேச செயலகம் வேலணை பிரதேச செயலாளர் மற்றும் சக உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் ஏனைய கல்லூரிகளிலிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் பல்கலைக் கழகங்களிலிருந்தும் வருகை தந்த அதிபர், ஆசிரியர், மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் கண்ணீர் அஞ்சலி விளம்பர பதாகைகள், மலர் வளையங்கள் மூலம் அனுதாபங்களை தெரிவித்த நல்லுள்ளங்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். மற்றும் இறுதி நிகழ்வில் ஒலி பெருக்கியில் உரையாற்றிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். நிகழ்வில் பங்கேற்று ஆறுதல் கூறி அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். யாழ்/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மாணவர் களினால் பான்ட் வாத்திய அணிவகுப்பு இறுதி ஊர்வல அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்ட அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் மீண்டும் மீண்டும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். இறுதி ஊர்வல நிகழ்வில் பங்குபற்றிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் வாகன ஒழுங்கமைப்பு செய்த நல்லுள்ளங்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். இன்று வரை அன்னாரின் நிகழ்விற்காக வீட்டில் தரித்து நின்று ஆறுதல் கூறியவர்களுக்கும் உணவுப் பண்டங்களை தந்து உதவியவர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். மேலும் நன்றி கூற தவறியவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கின்றோம்.

**ஸ்ரீலங்கா வீதி,**
**உடுவில் வடக்கு,**
**உடுவில், சுன்னாகம்.**

**குடும்பத்தினர்**
**0777 110 199, 077 201 8275**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பின் வடமாகாண நிலைய முகாமையாளர் சுதர்சினியால் மன்னார் - பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் சிறுவர்களுக்கான நூலகம் கடந்த திங்கட்கிழமை திறக்கப்பட்டது. நிகழ்வில் புலம்பெயர் சகோதரர்களின் நிதிப்பங்களிப்பில் வழங்கப்பட்ட புத்தக அலுமாரி மற்றும் அமைப்பினால் சேகரிக்கப்பட்ட புத்தகங்களும் வழங்கப்பட்டன. (ய-27)



யாழ்.குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு ஆச்சிரம முன்றிலில் கடந்த 28ஆம் திகதி சனிக்கிழமை சிறப்பாக இடம் பெற்றது. இதன்போது விசேட பூசை வழிபாடுகளும், திருமுறைப் பாராயணமும் இடம்பெற்றது. (ய-66)



தென்மராட்சி பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் 2022ஆம் ஆண்டுக்கான வருட இறுதி ஒன்றுகூடல் மற்றும் பிரிவுபசார விழா பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.
சங்கத் தலைவர் அருட்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேசசெயலகத்தில் பணியாற்றி இடமாற்றல் பெற்றும் ஓய்வுபெற்றவர்களுக்கும் பிரிவுபசாரமும் நடாத்தப்பட்டது. (ய-9)



# நிதி வழங்கலும் கௌரவிப்பும்

சாவகச்சேரி பெப்.6

தென்மராட்சி நிறுவனங்களின் பன்னாட்டு ஒன்றியத்தின் கல்விக்கு கை கொடுப்போம் என்னும் திட்டத்தில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மற்றும் க.பொ.த. உயர்தரப் பிரிவுகளில் இணைந்துள்ள மாணவர்களுக்கு கற்றல் ஊக்குவிப்பு நிதி வழங்கும் நிகழ்வு ஒன்றியத் தலைவர் செ.பேரின்பநாதன் தலைமையில் கைதடி நுணாவில் அறவழி நிலையத்தில் கடந்த 28ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் க.பொ.த. உயர்தர வகுப்பில் இணைந்துள்ள மாணவர்களுக்கு கற்றல் ஊக்குவிப்பு நிதியும், பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு மதிப்பளிப்பும் இடம்பெற்றன. அத்துடன் சமூக மற்றும் கலைப் பணியில் ஈடுபட்டுவரும் மூவருக்கு ஒன்றியத்தின் மதிப்புயர் விருதுகளும் சமூக அபிவிருத்தி மேம்பாட்டாளர் வீ.நடராசா மற்றும் வாழ்நாள் சமூக சேவையாளர் வீ.எஸ்.துரைராஜா ஆகியோருக்கான விருதுகளை அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பெற்றுக் கொண்டனர். மேலும் பல்கலை வித்தகரும் கலைஞருமான வி.திவ்வியராஜா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். (ய-9-20-131-27)



23 லட்சம் ரூபா நிதி அன்பளிப்பில் கொடிகாமம் - மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் மாணவர்களுக்கான ஓய்வுக் கொட்டகை திறப்பு விழா ஆசிரியர் சி.சிவானந்தம் தலைமையில் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
இதன்போது நிதியுதவி செய்த மைதிலி பத்மநாதன் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார். (ய-159)

# கருத்தரங்கமும் பத்திரிகை வெளியீடும்

யாழ்ப்பாணம், பெப். 6

மகாத்மா காந்தியடிகளின் 75ஆவது சிராார்த்த தினத்தையொட்டி அகில இலங்கை காந்தி சேவா சங்கம் ஏற்பாடு செய்த காந்திய சிந்தனை கருத்தரங்கமும் காந்தீயம் பத்திரிகை வெளியீடும், இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பத்திரிகையை வெளியிட்டு வைத்தார். அதன்பின்னர் "காந்தியடிகளின் பொருளாதார சிந்தனைகள்" எனும் தலைப்பில் காந்திய சிந்தனையாளரும் முன்னாள் அதிபருமான க.செல்வக்குமாரன் உரை நிகழ்த்தினார். (ஒ-14-159)



சமூக சேவகர் அமரர்.குணரத்தினம் ராஜ்குமாரின் 54ஆம் நாள் நினைவை முன்னிட்டு ஈச்சமோட்டை நண்பர்களின் ஏற்பாட்டில் யாழ். போதனா மருத்துவமனை குருதிவங்கிப் பிரிவின் அனுசரணையில் குருதிக்கொடை முகாம் நிகழ்வு 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது. (ய-66)



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனால் கடந்த வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட பிளாஸ்ரிக் கதிரைகள் தென்மராட்சி பிரதேசசெயலகத்தில் தெரிவுசெய்யப்பட்ட கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை மற்றும் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை ஆகியவற்றுக்கு கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன. (ய-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B

# 'பிட்கொய்ன்'- பாவனையை நிராகரித்தது மத்திய வங்கி

கொழும்பு, பெப்.6
இலங்கையில் 'பிட்கொய்ன்' பாவனையை அனுமதிக்கவேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கையை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசேகர நிராகரித்துள்ளார்.



இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக 'பிட்கொய்ன்' பாவனை பொருத்தமானது என்று கோடீஸ்வரரும், முதலீட்டாளருமான பில்டிப்பர் ஆலோசனை ஒன்றை முன்வைத்திருந்தார்.

அதற்குப் பதிலளித்தபோதே மத்திய வங்கியின் ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் 'பிட்கொய்ன்' பயன்பாடு நூறு வீதம் யதார்த்தம் இல்லை என்று தெரிவித்துள்ள மத்திய வங்கியின் ஆளுநர், அதனால் நெருக்கடி மேலும் மேசமடையலாம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயத்தை பரிசீலிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி இன்னமும் தயாராக இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

'பிட்கொய்ன்' என்பது பரவலாக்கப்பட்ட இலத்திரனியல் பணமாகும். இதில் வங்கியின் தலையீடு இன்றி கொள்வனவு, விற்பனை மற்றும் நாணயபரிமாற்றங்களை நேரடியாக மேற்கொள்ளமுடியும். இது நிகழ்நிலை பதிப்பு நாணயத்தை போன்றதாகும். மக்கள் 'பிட்கொய்னை' உங்களது இலத்திரனியல் பணப்பைக்கு அனுப்பிவைப்பதுடன் நீங்களும் ஏனையோருக்கு 'பிட்கொய்னை' அனுப்பிவைக்கலாம். இது முதலீடு செய்வதற்கான நவீன முறை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

# இந்திய ரூபாவைப் பயன்படுத்தி வர்த்தகத்தை விரிவாக்கத் திட்டம்

## மிலிந்த மொரகொட தெரிவிப்பு

கொழும்பு, பெப். 6
இந்திய ரூபாவைப் பயன்படுத்தி இந்தியாவுடனான வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கு இலங்கை திட்டமிட்டுள்ளது என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.



இந்திய தேசியக் கட்டண நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் உள்நாட்டு கட்டண அட்டைத் திட்டமான 'ரூபே' பொறிமுறையை கொழும்புக்கு வரும் இந்திய சுற்றுலாப் பயணிகளிடம் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் 75ஆவது சுதந்திரதின நிகழ்வு புதுடில்லியில் இடம்பெற்றபோது அதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் ஏற்பட்ட நெருக்கடியின் போது இந்தியா விரைவாகச் செயற்பட்டது. 3.9 பில்லியன் அமெரிக்க டொலரை எமது நாட்டுக்கு வழங்கியுள்ளது. 'ரூபே' பொறிமுறையானது, இலங்கைக்கு வரும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு எளிதாக இருக்கும். கொழும்புக்கு வரும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு ரூபே பொறிமுறையைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் ஆலோசித்து வருகின்றோம்.

இதன்மூலம் கொழும்பின் பொருளாதார மீட்சி தொடர்பான மூலோபாயத்தின் ஒரு பகுதியாக இந்திய ரூபாவை பயன்படுத்தி இந்தியாவுடனான வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கு இது உதவும் - என்றார். (ச-இ)

# வாகனத்தில் கடத்தி இளைஞர் கொலை!

கொழும்பு, பெப். 6
கொழும்பு - மாளிகாவத்தைப் பகுதியில் இளைஞர் ஒருவர் வாகனத்தில் கடத்திச்செல்லப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெமட்டகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெமட்டகொடலக் ஹிரு செவன அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் 24 வயதுடைய இளைஞரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இளைஞன் கடுமையாகத் தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு, அவர் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்புக்கு முன்பாக வீசப்பட்டுள்ளார். அதன்பின்னர், அவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை தெமட்டகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-இ)


## பெயர் மாற்றம்

மண்டான் ஏற்றம் கரணவாய் மேற்கு. கரவெட்டியில் வசிக்கும் பாஸ்கரன் சத்தியவாணி ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை பாஸ்கரன் சத்தியபவானி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் பாஸ்கரன் சத்தியபவானி என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**பாஸ்கரன் சத்தியபவானி**



## 40 வயதிற்கு உட்பட்ட அரசு சேவையிலுள்ள கீழ் உழைப்பு பட்டதாரிகளின் கவனத்திற்கு

40 வயதிற்கு உட்பட்ட சகல அரச சேவையிலுள்ள பட்டதாரிகளை போட்டிப் பரீட்சையூடாக உள்ளீர்ப்பு செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது. எனவே குறித்த சேவையில் ஆர்வமுள்ள சகல கீழ் உழைப்பு சங்க அங்கத்தவர்களை விண்ணப்பிக்கும்படி வடமாகாண கீழ் உழைப்பு பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

**விண்ணப்ப முடிவு திகதி: 10.02.2023**

https://applicationsdoenets.lk/exam என்ற இணைத்தளமூடாக சென்று விபரங்களை பார்வையிடுவதுடன் விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்க முடியும்.

**தொடர்புகளுக்கு: வடமாகாண கீழ் உழைப்பு பட்டதாரிகள் சங்க போஷகர் திரு.S.சந்திரசேகரம்**

**தொலைபேசி இலக்கம்: 075 855 9188/ 077 996 7142**

**தலைவர் A. சுகந்தன் 074 101 1101**


# மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி

கொழும்பு, பெப். 6
உலக சந்தையில் மசகு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆகியவற்றின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. அதன்படி, டபிள்யூ.ரி.ஐ. மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 73.39 அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

அத்துடன் பிரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்று 79.94 அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை- இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலை சற்று அதிகரிப்பைப் பதிவு செய்து 2.4 அமெரிக்க டொலராகக் காணப்படுகிறது. (ம-14-இ)

# நிலக்கரிக் கொள்வனவுக்கு 15.3 பில்லியன் ரூபா தேவை

கொழும்பு, பெப். 6
அடுத்த வாரங்களுக்கான நிலக்கரியைக் கொள்வனவு செய்வதற்கு உடனடியாக 15.3 பில்லியன் ரூபா தேவைப்படுகிறது. இதற்கான நிதி கிடைக்காவிட்டால், நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் செயற்பாடுகளைத் தொடர்வதில் நெருக்கடிகள் ஏற்படும் என்று இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் ஷெஹான் சுமனசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2023 ஜனவரி 30ஆம் திகதிமுதல் பெப்ரவரி 3ஆம் திகதி வரையிலான மூன்று நிலக்கரி ஏற்றுமதிக்கு கட்டணங்களைச் செலுத்தவேண்டும். ஒரு கப்பலுக்கு 1.35 பில்லியன் டொலர் என்ற அடிப்படையில் முதல் தவணையாக அதில் 30 வீதத்தை செலுத்தியுள்ளோம். மற்ற இரண்டு தவணைகள் இன்னும் செலுத்தப்படவில்லை.

இதைத்தவிர மூன்று கப்பல்களில் இரண்டுக்கு 30 வீத ஆரம்பக் கொடுப்பனவுகளும், மூன்று கப்பல்களுக்கும் செலுத்த வேண்டிய மீதமுள்ள 70 வீத தொகையுடன் சேர்த்து, இன்று பெப்ரவரி 4ஆம் திகதி (நேற்றுமுன்தினம்) முதல் பெப்ரவரி 10ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நிலக்கரி கொள்முதல் செய்ய 10.74 பில்லியன் ரூபா தேவைப்படுகிறது.

எனவே மின் உற்பத்தி நிலையங்களில் நிலக்கரி தீர்ந்துபோகும் முன்னர் இந்த நெருக்கடிக்கு உடனடித் தீர்வு காணவேண்டும்.

கடந்த ஜனவரி மாதம் நாட்டுக்கு வரவிருந்த ஏழு நிலக்கரிக் கப்பல்களில் 6 கப்பல்களே நாட்டுக்கு வந்துள்ளன. பெப்ரவரி மாதம் (இம்மாதம்) 7 நிலக்கரிக்கப்பல்கள் நாட்டுக்குக் கொண்டுவரப்படவிருந்தன. எனினும், ஐந்து கப்பல்கள் வருவதற்கே தற்போது ஏற்பாடுகள் முழுமைபெற்றுள்ளன - என்றார். (ம-14-இ)

# புத்தர் கடத்தல் இருவர் கைது!

புதையலிலிருந்து எடுக்கப்பட்ட புத்தர் சிலைகள் எனக்கூறி பெறுமதிவாய்ந்த மூன்று புத்தர் சிலைகளைக் கடத்தி விற்பனை செய்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேகநபர்கள் தந்தையும் மகனும் ஆவர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சொற்போரை...

ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரங்கள் பகிரப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் சுதந்திர நாள் உரையில் தெரிவித்திருந்தார். தமிழ்த் தலைவர்கள் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை வலியுறுத்தியிருந்தனர். இத்தகைய முரண் நிலைகளை எவ்வாறு கையாளப்போகின்றீர்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடத்தில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு அவர் பதிலளித்தார்.

'சொல்லாடல்களை வைத்துக்கொண்டு கருத்து மோதல் எதுவும் வேண்டாம். நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் சமஷ்டி அடிப்படையில் தீர்வு வழங்கப்படவேண்டும் என்று கூறவில்லை. ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரங்கள் அனைத்தும் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்றுதான் அன்றும் சரி இன்றும் சரி கூறிவருகின்றேன். எனவே ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரங்கள் பகிரப்படும். தமிழ் அரசியல் தலைவர்கள் அரசமைப்பில் வலியுறுத்தப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய அதனை நடைமுறையில் கொண்டு வருவதற்கான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். அதைவிடுத்து ஒரு தரப்பினர் சமஷ்டி வேண்டும் என்றும் இன்னொரு தரப்பினர் 13ஆம் திருத்தச் சட்டம் தீர்வைத் தராது என்றும் அரசியல் ரீதியில், இன ரீதியில் குழப்பங்களை ஏற்படுத்தும் விதத்தில் கருத்துக்களைத் தெரிவிப்பதை தவிர்ப்பது நல்லது' - என்றார் ரணில். (அ-ஒ-5-22)

### அரசாங்க...

வேண்டிய நிலையில், தமக்குரிய பணம் திறைசேரியால் விடுவிக்கப்பட்டாலே பணிகளை ஆரம்பிப்போம் என்று அரசாங்க அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்கிடையில், உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக 770 மில்லியன் ரூபாவை விடுவிக்குமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் பணிகளுக்காக 45 மில்லியன் ரூபா வரையில் அரசாங்க அச்சகத்துக்கு தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கவேண்டியுள்ளது. மேற்படி நிதியை திறைசேரி இன்னமும் அரசாங்க அச்சகத்துக்கு வழங்கவில்லை.

தபால்மூல வாக்களிப்புக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், வாக்குச்சீட்டுக்களை ஒப்புநோக்கும் பணி தேர்தல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வாக்குச்சீட்டுக்கள் எதிர்வரும் 10ஆம் அல்லது 11ஆம் திகதிக்கு முன்னர் அச்சிட்டு தேர்தல்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

திறைசேரியின் நிதி விடுவிப்புத் தாமதம் காரணமாக அரசாங்க அச்சகத் திணைக்களம், வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதை பிற்போட்டுவருவதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 10ஆம் திகதி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ஒ,5)

### உள்ளூராட்சித்....

தற்போதுசுகாதாரம்உள்ளிட்டஅனைத்து துறைகளிலும் நிலவும் நிதி நெருக்கடி, இதில் தாக்கத்தை செலுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஆயினும், இயலுமான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தேவைக்கேற்றவாறு நிதியை விடுவிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறிரத்நாயக்கவிடம் வினவிய போது, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பது அரசமைப்பினூடாக உறுதிப்படுத்தப்பட்ட கடமைஎன்பதால், பகுதிபகுதியாகவேனும் நிதி வழங்கப்படுமென நிதி அமைச்சு ஏற்கனவே தெரிவித்துள்ளதாக கூறினார். அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படுமெனதாம் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-ஒ-இ)

# எழுச்சிப் பேரணிக்கான போக்குவரத்து ஒழுங்குகள்

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ். பல்கலைகலைக்கழக மாணவர்களின் ஒருங்கிணைப்பில் ஆரம்பமாகிய சுதந்திர தின எதிர்ப்பு பேரணியின் நிறைவு நாள் நிகழ்வு நாளை மட்டக்களப்பில் இடம்பெறவுள்ள நிலையில், மக்கள் எழுச்சிப் பேரணியில் வடக்கு மாகாணத்திலிருந்து கலந்து கொள்பவர்களுக்குரிய பேருந்து ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இருந்தும் கிளிநொச்சி பரந்தன் பேருந்து நிலையம் மற்றும் கிளிநொச்சி புதிய பேருந்து நிலையத்திலிருந்தும், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் பேருந்து நிலையங்களிலிருந்தும் பேருந்துகள் செல்லவுள்ளன.

அந்தந்த மாவட்டங்களில் இருந்து செல்லவுள்ளோர் மேற்குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று பேருந்தில் தங்களது பயணத்தை தொடர முடியும் மேலதிக விவரங்களுக்கு (077) 481 9490 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் விஜயகுமார் தெரிவித்துள்ளார். (அ-ஒ-7)

# போயாதினத்தில் மதுவிற்பனை

## ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 6

போயாதினமாகிய நேற்று சாவகச்சேரி நகரப்பகுதியில் மதுவரித் திணைக்களத்துக்கு அருகாமையில் பியர் மற்றும் சாராயம் விற்பனை செய்த ஒருவர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்

30 வயதுடைய அதே இடத்தைச் சேர்ந்த நபர், வீட்டில் சாராயம் மற்றும் பியர் விற்பனையில் ஈடுபட்டு வந்ததாக மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அந்த இடம் முற்றுகையிடப்பட்டபோதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து அதிகளவு சாராயப் போத்தல்கள் மற்றும் பியர் ரின்கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. (அ-ஒ-26)

### செலவு...

தின் மதிப்பீட்டை விடவும் இது அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொடுப்பனவுகள், எரிபொருள் செலவுகள், வாகன வாடகை, தொலைபேசி மற்றும் தகவல் தொடர்பு பொருள்கள், எழுதுபொருள்கள் மற்றும் இதர செலவுகளை உள்ளடக்கிய மதிப்பிடப்பட்ட செலவுகள் ஆறு மடங்கு அதிகரிப்பைக் காட்டியுள்ளதாக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த அதிகரிப்புகளில் வாகன வாடகைச் செலவு 138 மில்லியன் ரூபாவிலிருந்து 745 மில்லியன் ரூபாவாகவும் எரிபொருள் கட்டண மதிப்பீடுகள் 108 மில்லியன் ரூபாவிலிருந்து 675 மில்லியனாகவும் அதிகரித்துள்ளது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூத்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்ட மதிப்பீடுகளை விட பொலிஸ் திணைக்களம் அனுப்பிய மதிப்பீடுகள் மிக அதிகமாக வுள்ளது என்றும் செலவுகளுக்காக உரிய பத்திரங்களை வழங்கினால் மட்டுமே பணம் செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார். தற்போது நாட்டில் காணப்படும் விலைவாசிகளுக்கு ஏற்பவே செலவினங்களை கணிப்பிட்டுள்ளதாக பொலிஸ் திணைக்கள உயரதிகாரிஒருவர்தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

### எரிவாயு...

ரூபாவால் அதிகரித்துள்ளது. கொழும்பில் அதிகூடிய சில்லறை விலையாக 4 ஆயிரத்து 743 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 5 கிலோ கிராம் எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 134 ரூபாவால் அதிகரித்து ஆயிரத்து 904 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பு காரணமாகவே சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

### சிற்றுண்டிகளின்...

சமையல் எரிவாயு விலை அதிகரித்தமை யால் தமது உற்பத்திகளின் விலையை அதிகரிக்கவேண்டி ஏற்படும் என்று சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். (அ-ஒ,இ)

### முல்லைத்தீவில்...

பரந்தன் - முல்லைத்தீவு ஏ-35 வழியாக முல்லைத்தீவை நோக்கிப் புறப்பட்டது. பேரணியாக வந்தவர்களுக்கு முல்லைத்தீவு - விசுவமடு மக்கள் மற்றும் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் பூரண ஆதரவை நல்கியதோடு குளிர்பானம் மற்றும் தேநீர் என்பனவும் பரிமாறினர்.

முல்லைத்தீவு - தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் தாயக தேசத்தின் விடிவுக்காக வித்தாகிப்போனவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் பின்னர் நண்பகல் புதுக்குடியிருப்பு நகரை அடைந்த பேரணி முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்குச் சென்று அங்கு அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு நகரை நோக்கி புறப்பட்ட பேரணி மாலை 6 மணியுடன் முல்லைத்தீவு நகரில் இரண்டாவது நாளாக நிறைவடைந்தது. மீண்டும் இன்றுகாலை முல்லைத்தீவு நகரிலிருந்து கொக்கிளாய் வீதிவழியாக திருகோணமலை நகரை நோக்கி இந்த பேரணி செல்ல உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

### ஆர்னோல்ட்டின்

யாகவுள்ளார். யாழ். மாநகரசபையில் முன்னாள் மேயர் வி.மணிவண்ணன் அணியைச் சேர்ந்த உறுப்பினர் வ.பார்த்தீபன் இந்த வழக்கைத் தொடுத்திருந்தார். அவர் சார்பில் சட்டத்தரணி கு.குருபரன் முன்னிலையாகியிருந்தார். கடந்த 25ஆம் திகதி இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இன்றைய தினம் எதிராளிகளை மன்றில் முன்னிலையாகப் பணிப்புரை விடுக்கப்பட்டது. மேயர் தெரிவின்போது உள்ளூராட்சி ஆணையாளர் கோரம் இல்லை என்று ஒத்திவைத்துவிட்டு பின்னர் ஆர்னோல்ட்டை மேயராக அறிவித்தமை மற்றும் இரு தடவைகள் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்ட ஒருவர் மீண்டும் மேயராக தெரிவு செய்யப்பட முடியாது என்கின்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. (அ-ஒ,5)

### இறுதிநேரத்தில்...

ளையை வழங்கியுள்ளனர். ரணியின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளன. அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டக்களப்புக்கு நாளை பயணமாகவுள்ளனர். இவ்வாறானதொரு நிலையில் திருக்கோயில் பொலிஸ் பிரிவில் போராட்டமோ, பேரணியோ முன்னெடுக்க முடியாது என்ற உத்தரவு அடங்கிய கட்டளை வழங்கப்பட்டுள்ளது. (அ-ஒ,125)

### ஹைஏஸ்...

பயணித்த இளைஞர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் ஆபத்தான கட்டத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைச் சேர்ந்த அனுஜன் (வயது-19) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். ஜெயசீலன் ரகுசன் (வயது- 17) என்ற இளைஞர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அவருக்கு செயற்கை சுவாசம் வழங்கப்பட்டு வருகின்றது. 'மருதனார் மடத்திலிருந்து கொக்குவில் நோக்கி 3 மோட்டார் சைக்கிள்கள் வேகமாகப் பயணித்ததாகவும் அதில் ஒரு மோட்டார் சைக்கிள், யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப்பழை நோக்கி - எதிர்திசையில் பயணித்த ஹை ஏஸ் வாகனத்துடன் மோதியதாகவும், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் நீண்ட தூரத்துக்கு தூக்கி வீசப்பட்டனர்' என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ,5,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களிடமிருந்து மக்களை விடுவிப்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஆவேசம்

கொழும்பு, பெப். 6

ராஜபக்ச குடும்பம் இந்த நாட்டை அழித்து வறிய நிலைக்கு இட்டுச்சென்றது. சிறு குழந்தை முதல் முதியவர் வரை, அரச ஊழியர் முதல் கூலித்தொழிலாளி வரை அனைவரினதும் இயல்பு வாழ்க்கை பெரும் ஆபத்தைச் சந்தித்துள்ளது. ராஜபக்சக்களின் பிடியிலிருந்து விரைவில் மக்களை விடுவிப்போம் - இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசாங்கம் தவறான கொள்கைகளைப் பின்பற்றி நாட்டின் பிரச்சினை களைத் தீர்க்க முயற்சிக்கின்றது. இவர்களின் இத்தகைய செயற்பாடுகளால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. ராஜபக்சவின் அடிமைத்தனத்தை இன்னமும் உறுதிப்படுத்தும் பெரமுன - ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான முதல் நடவடிக்கை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆரம்பிக்கப்படும்.

உலகில் எந்த நாடும் பொருளாதாரத்தை சுருக்கி பிரச்சினைகளைத் தீர்த்ததாக இல்லை. தற்போதைய அரசாங்கம் பொருளாதாரத்தை சுருக்கி நாட்டு மக்களை அழிக்க முயல்கின்றது. தேவையைக் குறைப்பதன் மூலம் நாட்டின் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று நினைக்கிறார்கள். அது தவறு. இந்தப் பொருளாதார மற்றும் சமூக வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கு பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதே ஒரேதீர்வு - என்றார். (ம)

# ‘அக்கரை’ சுற்றுலா மையத்தை இராணுவ மயமாக்க முயற்சிகள்

## ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் - வலி.கிழக்கு தவிசாளர் காட்டம்

யாழ்ப்பாணம், பெப்.6

வலி.கிழக்கு பிரதேசசபைக்குச் சொந்தமான ‘அக்கரை’ சுற்றுலாக் கடற்கரைப் பகுதியை இராணுவ மயமாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று வலி.கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். அந்தப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை கடற்படையினர் இரகசியமாக நில அளவீட்டு முயற்சியில் ஈடுபட்டனர். இது தொடர்பான தகவல் கிடைத்து அந்த இடத்துக்குச் செல்வதற்கிடையில் கடற்படையினர் அங்கிருந்து சென்றுவிட்டனர் என்றும் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் குற்றஞ்சாட்டினார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்கு உரித்தான ‘அக்கரை’ சுற்றுலா மையத்தில் கடற் படைக்குக் காணி ஒதுக்கப்பட்டுள்ளது என்று வலிகாமம் கிழக்குப் பிரதேசசெயலகம், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்குக் கடிதம் மூலம் அண்மையில் அறிவித்தது. இவ்வாறு காணியொதுக்கப்பட்ட பின்னரே இது தொடர்பில் சிலபல பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இதுதொடர்பில் தவிசாளர் நிரோஷ் தெரிவித்ததாவது:-

கடற்படையினருக்கு பிரதேச சபையின் காணியை வழங்கியுள்ளேன் என பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார். அவ்வாறான அறிவிப்பு கிடைத்தவுடன் குறித்த காணியை வழங்கமுடியாது என நான் மறுத்திருந்தேன். இந்தநிலையில் குறித்த பகுதியில் இரகசியமாகக் கடற்படையினர் நுழைந்து அடாத்தாக அள வீடுகளை மேற்கொள்கின்றனர் எனத் தகவல் கிடைத்தது. கடற்கரைக்கு விரைந்து சென்றபோது அங்கிருந்து ஏற்கனவே கடற்படையினர் விலகிச் சென்றுவிட்டனர். அவர்கள் நான் வருகிறேன் எனத் தகவலறிந்து சென்றார்களா? அல்லது அளவீடுகளை மேற்கொண்டு விட்டுச் சென்றார்களா? எனத் தெரியவில்லை. இந்தக் கடற்கரைப் பகுதி உள்ளூராட்சி மன்றத்தின் ஆளுகைக்குள் உள்ள நிலமாகும். இதனைத் தன்னிச்சையாக இராணுவத்துக்கு வழங்குவதற்கான முடிவுகளை பிரதேச செயலாளர் எடுக்க முடியாது. பல மில்லியன் ரூபாவில் எம்மால் முதலீடு செய்யப்பட்ட இந்தச் சுற்றுலா வலயத்தை இராணுவ மயப்படுத்த அனுமதிக்க முடியாது. எமது மக்களின் காணிகளை விடுவிப்ப தாக அரசாங்கம் கூறுகின்ற போதும் காணிகளை அபகரிப்பதிலேயே தீவிரம்காட்டி வருகின்றது - என்றார். (ச-இ)


## பணிப்பெண் தேவை

யாழ். நல்லூரை அண்மித்த வீடு ஒன்றில் தங்கி இருந்து வேலை செய்யக் கூடிய பணிப்பெண் ஒருவர் தேவை. பகல் நேரம் மட்டும் வேலை செய்ய விரும்புபவர்களாயினும் ஏற்றுக் கொள்ளப்படும். தகுந்த சம்பளம், லீவு, சலுகைகள் வழங்கப்படும்.

தொடர்பு:077 329 2259

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ V பெற்றோர் அவர்களின் 27வயதுடைய UK இல் முகாமைத்துவப் படிப்பை நிறைவு செய்த கொழும்பில் Asociate ஆகப் பணிபுரியும் உதயத்துச் செவ்வாய் கன்னி ராசி உடைய மகளுக்கு பொருத்தமான மணமகனை எதிர்பார்க்கின்றனர்.

T.P.: 075 216 9721

## மருந்தகத்திற்கு மருந்தாளர் தேவை

Pharmacist இலங்கை மருந்துவ சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வைத்திருக்கும் மருந்தாளர் தேவை. (ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்). சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

(CS23319) (3/6)

077 151 4842, 075 468 4153

## வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு இரவு நேர (முழு நேரம் / பகுதிநேரம்) வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர் பார்க்கப்படுகின்றன.


1). மெசின் மைண்டர்
2). உதவியாளர் (பழகவிரும்புவர்களும்) தேவை.

ஆர்வமுள்ளவர்கள் இன்று (06.02.2023) திங்கட்கிழமை காலை 09.30 - 11.30 மற்றும் மாலை 05.30 - 07.30 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்

தோற்றம் 14 - 03 - 1941



மறைவு 01 - 02 - 2023

## சுப்பிரமணியம் பரமேஸ்வரன்

முன்னாள் இலங்கைத் தூதரக செயலாளர் (இந்தோனேசியா, கென்யா)
மொழி பெயர்ப்பாளர் (கனடா)

அரியாலை திருமகள் வீதியை பிறப்பிடமாகவும், 21 கனகரட்ணம் வீதியை வசிப்பிடமாகவும் மார்க்கம், கன்டாவை தற்போதய வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பரமேஸ்வரன் அவர்கள் கடந்த (01.02.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (தலைமை ஆசிரியர்)-இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும், குகராணியின் அன்புக்கணவரும், ரஞ்சித்குமார் (பிரான்ஸ்), தர்சினி (கனடா), அசோக்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றக்சாயினி (பிரான்ஸ்), லியோசிறி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற கேதீஸ்வரன், குகநேயன், சண்முகலிங்கம் (குஞ்சு - கனடா), சுசீலா, சிவசோதி ஆகியோரின் அன்புச்சகோதரரும், தவமணி, கமலாம்பிகை, ஜெயந்தி (கனடா), காலஞ்சென்ற தர்மலிங்கம், இரத்தினசிங்கம், குகதாஸ் (பிரான்ஸ்), கமலதாஸ் (USA), கமலராணி, பாலேந்திரதாஸ் (UK), குகேந்திரதாஸ் (UK), இந்திராணி (நோர்வே) ஆகியோரின் அருமை மைத்துனரும், தருணியா, லக்சியா, அஸ்விந்தன், ரிசிகன், திசாரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2023) செவ்வாய்க்கிழமை கனடா நேரப்படி மதியம் 12.00 மணியவில் Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge st,North york On M2N 5L6, Canada அந்திய சேவையில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ரஞ்சித்குமார் - மகன் : 0033626508673
அசோக்குமார் - மகன் : 0014164644777
குகராணி(மனைவி), தர்சினி - மகள் : 0014165487477
சண்முகலிங்கன் (குஞ்சு) - சகோதரன் : 0019058406039
குகதாஸ் (மைத்துனர்) : 0033614059142

தகவல்:
குடும்பத்தினர்

(CS 23321) (3/6)



[illegible]த்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org